பத்திரிக்கை செய்தி

குடும்பநல வன்முறை தடுப்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க ரூ.3,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய சமூக நலதுறை பாதுகாப்பு அலுவலர் கைது

புகார்தாரர் திருமதி.வனஜா, மோரசப்பட்டி, காவாப்பட்டி கிராமம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் கடந்த 16.10.2025ம் தேதி சமூக நலதுறை பாதுகாப்பு அலுவலர் அலுவலகத்தில் தனது கணவர் மாது மீது குடும்பநல வன்முறை தடுப்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்துள்ளார். புகாரினை விசாரித்து விசாரணை அறிக்கையை போச்சம்பள்ளி நீதிமன்றத்திற்கு அனுப்ப திருமதி.மார்த்தா, சமூக நலதுறை பாதுகாப்பு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.3,000/- லஞ்சமாக தரவேண்டும் என புகார்தாரரிடம் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 31.12.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.மார்த்தா, சமூக நலதுறை பாதுகாப்பு அலுவலர், அவர்கள் லஞ்ச பணம் ரூ.3,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.